## ஒன்றிய பா.ஜ.க. அரசு நமக்கான திட்டங்கள் — நிதியை வழங்குவதில்லை:

# டெல்லி அணியை வீழ்த்தி தமிழ்நாடு அணியை வென்று காட்டுவோம்!

# மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் வாக்களிக்க வேண்டிய தேர்தல் இது!

### போடிநாயக்கனூர் தொகுதியில் — ஓ.பன்னீர்செல்வத்தை ஆதரித்து

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!



**தேனி,ஏப்.19–**

**தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கான தி.மு.கழக வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏற்கனவே நமக்கான நிதியைக் கொடுப்பதில்லை. நமக்கான திட்டங்களையும் நிறுத்தி வைக்கிறார்கள். எந்தத் திட்டத்தையும் தமிழ்நாட்டுக்கு வழங்கியதில்லை. டெல்லி அணியை வீழ்த்தி தமிழ்நாடு அணியை வென்று காட்டுவோம்! தமிழ்நாட்டு மக்கள், மிகுந்த எச்சரிகையுடன் வாக்களிக்க வேண்டிய தேர்தல் இது'' என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

இவ்வளவு சிறப்பான, அன்பான, எழுச்சியான வரவேற்பு கொடுத்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 16 நாட்களாக கிட்டத்தட்ட 100 சட்டமன்றத் தொகுதிகளுக்குச் சென்று, நம் வெற்றி வேட்பாளர்களுக்கு, நம் முதலமைச்சருக்கு, நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும் என்று, நம் உதயசூரியன் சின்னத்திலும், கூட்டணி சின்னங்களிலும் வாக்கு கேட்டு இன்று இந்த போடிநாயக்கனூர் வந்திருக்கிறேன்.

#### வெற்றி தேடித் தர வேண்டும்

அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தர வேண்டும். சென்ற முறை அண்ணனை 10,000 வாக்கு வித்தியாசத்தில் நாம்தான் அண்ணனிடம் தோற்றோம். இந்த முறை அதற்கும் சேர்த்து நாம் அண்ணனை குறைந்தபட்சம் 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து, சட்டமன்றத்துக்கு நம் உதயசூரியன் சார்பாக, தி.மு.க சார்பாக ஒரு சிறப்புடன் சட்டமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

இதே உணர்வு, இதே எழுச்சி இன்னும் ஒரு வாரத்துக்கு இருக்க வேண்டும். ஏதோ உதயநிதி வந்தார், சென்று பார்த்தோம், பேசினார், கூடி கலைந்து சென்றுவிட்டோம், கோஷம் போட்டோம் என்று சென்றுவிடக்கூடாது. அடுத்த ஒரு வாரம் மிகவும் முக்கியம். அதை மனதில் வைத்துக்கொண்டு நம் பிரச்சாரப் பணிகளை நாம் செய்ய வேண்டும்.

காலையில் மதுரை மாவட்டத்தில் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தேன். அதற்குப் பிறகு ஆண்டிபட்டி முடித்துவிட்டு, இப்போதுதான் உங்களைப் பார்ப்பதற்காக போடிக்கு வந்திருக்கிறேன். எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும், தேனி மாவட்டத்துக்குச் சென்றால், அது தனி கௌரவம்தான், தனி மகிழ்ச்சி, தனி பெருமை. உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது இப்போதே தெரிகிறது கழகத்தின் வெற்றி இந்த மாவட்டம் முழுவதும் உறுதி செய்யப்பட்ட ஒன்று. நான் உங்களிடம் கேட்பதெல்லாம் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களை இந்த மாவட்டத்திலேயே அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

#### வாழ்நாளில் மறக்க மாட்டேன்

எனக்கும் தேனி மாவட்டத்துக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. பொது வாழ்க்கைக்கு வந்த உடனே 2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு தமிழ்நாடு முழுவதும் சென்றேன். ஆனால், அதற்கு முன்பு 2018-ஆம் ஆண்டு, அப்போது நான் இளைஞர் அணி செயலாளர் கூட கிடையாது. அப்போது தலைவர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் கிராம சபைக் கூட்டம் நடத்தினார்கள். அப்போது நான் முதன்முதலில் வந்தது, இந்த தேனி மாவட்டத்துக்குத்தான். என் அரசியல் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் போட்டதே, இந்த தேனி மாவட்டம் தான். அதனால் தேனி மாவட்டத்தை நான் என்றைக்குமே வாழ்நாளில் மறக்க மாட்டேன்.

தேனீ மாதிரி உழைக்கக்கூடிய மக்கள்தான், இந்த தேனி மாவட்ட மக்கள். அதனால்தான் அந்த உரிமையோடு, அந்தப் பெருமையோடு உங்களையெல்லாம் சந்திப்பதற்கு வந்திருக்கிறேன்.

அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களை, நான் வந்து உங்களிடம் அறிமுகப்படுத்த வேண்டுமா? தமிழ்நாடு முழுவதும் தெரிந்தவர், இந்தியா முழுவதும் அறியப்பட்டவர். அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கு வாக்கு கேட்க வந்ததை எனக்குக் கிடைத்த மிகப்பெரிய ஒரு பெருமையாக நான் கருதுகிறேன். நீண்ட நெடிய அரசியல் அனுபவத்துக்குச் சொந்தக்காரர். எளிய பின்புலத்திலிருந்து வந்து வாழ்க்கையைத் தொடங்கி இன்று அரசியலில் பல உயரங்களை அவரின் உழைப்பு மூலமாகத் தொட்டவர். எந்த நேரமும் சிரித்த முகத்தோடு, அது எவ்வளவு பிரச்சினை வந்தாலும் சரி, சிரித்துக்கொண்டுதான் இருப்பார்.

#### பாடம் கற்றுத் தர வேண்டும்

குறிப்பாக இந்தப் போடி தொகுதி மக்களின் ஒவ்வொரு தேவையையும் உணர்ந்தவர். இந்தத் தொகுதியைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடியவர். மாற்றி மாற்றி காலைப் பிடித்து, மாற்றி மாற்றித் துரோகம் செய்து கொண்டிருக்கக்கூடிய எடப்பாடி பழனிச்சாமிக்குச் சரியான பாடத்தைக் கற்றுத் தர வேண்டும் என்று இன்று நம் கழகத்தில் நம் தலைவரைத், தலைவராக ஏற்று, நம் கழகத்துக்கு அவர் வந்திருக்கிறார். இன்று அ.தி.மு.க-வை அமித்ஷாவிடம் மொத்தமாக விற்றுவிட்ட எடப்பாடி பழனிச்சாமிக்கு, இந்தத் தேர்தலில் நாம் ஒரு சரியான பாடத்தைக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

நிச்சயம் நம் தலைவர்தான் மீண்டும் முதலமைச்சராக வரப்போகிறார். மீண்டும் தி.மு.க.தான் ஆட்சி அமைக்கப்போகிறது. நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை இந்தத் தொகுதியில் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும். எதிர்த்துப் போட்டியிடும் அ.தி.மு.க வேட்பாளருக்குத் டெபாசிட் போகும் அளவுக்கு, நம் வெற்றி இருக்கவேண்டும்.

நான் இன்று அவரை அழைத்து வந்திருக்கிறேன். மீண்டும் உதயசூரியனுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டு வந்திருக்கிறேன். இந்தத் தொகுதிக்கு நாம் அவ்வளவு திட்டங்களை செய்து கொடுத்திருக்கிறோம். உதாரணத்துக்குச் சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

#### போடிநாயக்கனூர் திட்டங்கள்

சுமார் 76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை உங்களின் வேட்பாளர் அண்ணன் ஓ.பி.எஸ் அவர்கள் கொண்டுவந்துள்ளார்.

உப்பார்பட்டி மற்றும் தப்புக்குண்டு கிராமப் பகுதிகளை உள்ளடக்கி, மெகா உணவுப் பூங்கா 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொண்டு வந்திருக்கிறார்.

அணைக்கரைப்பட்டி விளக்கு முதல் போடிநாயக்கனூர் வரைக்கும் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய புறவழிச் சாலை போடப்பட்டுள்ளது.

கோட்டூர் பகுதியில் 11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு விடுதி கட்டிக் கொடுத்திருக்கிறார்.

தொகுதி முழுவதும் 103 கிலோமீட்டர் நீளத்துக்குத் தரமான சாலைகள் போடப்பட்டிருக்கின்றன, அவையெல்லாம் அவரின் முயற்சியில் இந்தத் தொகுதிக்கு வந்தது.

பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு அறிவு மையம், 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தோழி மகளிர் விடுதி.

மஞ்சிநாயக்கன்பட்டி ஊராட்சியில் கொட்டக்குடி ஆற்றின் அருகே புதிய தடுப்பணை - இதெல்லாம் நாம் செய்து கொடுத்திருக்கிறோம்.

இப்போது மீண்டும் உங்களிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அவரைச் சட்டமன்ற உறுப்பினராக நீங்கள் அனுப்பி வைத்தீர்கள் என்றால், நிச்சயம் இந்தத் தொகுதிக்கு மேலும் என்னென்ன தேவையோ அனைத்தையும் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள் உங்களுக்காக நிச்சயம் செய்து கொடுப்பார்.

#### முதல் கையெழுத்து

ஆட்சிக்கு வந்த உடனே நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 வரை சேமித்திருக்கிறார்கள்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், காலையில் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள் என்றால், அவர்களுக்குத் தரமான காலை உணவு கொடுத்திருக்கிறோம்.

கல்லூரிக்குப் படிக்கச் சென்றால் அவர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகை மாதம் 1,000 ரூபாய் கொடுத்திருக்கிறோம்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு கல்லூரி மாணவர்கள் 10 லட்சம் பேருக்கு இலவச மடிக்கணினி கொடுத்திருக்கிறோம்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். சென்ற சட்டமன்றத் தேர்தலின் போது நாம் சொன்ன வாக்குறுதி. இன்று மாதந்தோறும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு உரிமைத் தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதை நிறுத்துவதற்கு இன்று அ.தி.மு.க-வும் பா.ஜ.க-வும் முயற்சி செய்தார்கள். தேர்தலைக் காரணம் காட்டி மூன்று மாதத்துக்கு உரிமைத் தொகை திட்டத்தை நிறுத்துவதற்கு நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். ஆனால் நம் முதலமைச்சர் என்ன செய்தார்? ``நான் 1,000 ரூபாய் கொடுக்கிறதை நிறுத்த முயற்சி செய்கிறாயா? நான் கொடுக்கிறேன் 5,000 ரூபாய், தடுத்துப் பார்'' என்று கொடுத்தார். பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என மூன்று மாதத்துக்குச் சேர்த்து 3,000 ரூபாய், கோடைகால சிறப்பு நிதி 2,000 என்று 5,000 ரூபாய் நம் தலைவர் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்குக் கொடுத்தார்கள்.

நம் தலைவர் காலை 6 மணிக்கு மகளிரின் வங்கிக் கணக்கில் பணத்தைப் போட்டார். மகளிர் என்ன செய்தார்கள்? 9 மணிக்கெல்லாம் சென்று பணத்தை எடுத்துவிட்டார்கள். அவ்வளவு விழிப்புணர்வு. ஏன் எடுத்தீர்கள்? மோடி அரசு வங்கியில் குறைந்தபட்ச இருப்பு இல்லை என்று சொல்லி, இந்த உரிமைத் தொகையை எடுத்துவிடுவார்கள் என்ற பயத்தில் சென்று எடுத்தீர்கள்.

அந்த அளவுக்கு விழிப்புணர்வோடு இருக்கிறீர்களே! 23-ஆம் தேதி இதே மாதிரி விழிப்புணர்வோடு காலையில் வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்குப்பெட்டியில் அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

#### சில வாக்குறுதிகள்

சில வாக்குறுதியும் நம் தலைவர் கொடுத்திருக்கிறார். மகளிர் உரிமைத் தொகை இதுவரைக்கும் 1,000 ரூபாய் கொடுத்துக்கொண்டிருந்தோம். ஆட்சி அமைந்தவுடனே அதை 2,000-ஆக உயர்த்தி வழங்குவேன் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பு வரை கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கப்படும் என்று வாக்குறுதி.

கல்வி ஊக்கத் தொகை 1,000 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை உயர்த்தி 1,500-ஆக வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம்.

முதியோர் உதவித் தொகை 1,200 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை உயர்த்தி 2,000 ரூபாய் தருகிறேன் என்று நம் முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்த ஐந்து வருடத்தில் 10 லட்சம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டு, யார் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ, அவர்களுக்கெல்லாம் கலைஞர் கனவு இல்லம் வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அடுத்த ஐந்து வருடத்தில் 35 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

எல்லாவற்றையும் விட முக்கியமான வாக்குறுதி உங்களுக்குத் தெரியும். ஏற்கனவே மகளிர் எல்லாம் தயாராகிவிட்டார்கள். வீட்டில் இதைத்தான் அமர்ந்து விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சி அமைந்தவுடனே, நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மகளிர் கைகளிலும் 8,000 ரூபாய் ஒப்படைத்துவிடுவார். மகளிர் நீங்கள் முடிவு எடுத்துக்கொள்ளுங்கள். வீட்டில் அமர்ந்து பேசி, நீங்களே ஒரு முடிவு எடுத்துக்கொள்ளுங்கள். அந்தச் சண்டைக்கு, அந்தப் பஞ்சாயத்துக்கு நாங்கள் வரவில்லை என்று கூறிவிட்டார் முதலமைச்சர். வீட்டிற்கு என்ன தேவையோ ஃப்ரிட்ஜ், மிக்ஸி, கிரைண்டர், தொலைக்காட்சி என எதுவாக இருந்தாலும் மின்சாதனப் பொருட்கள் நீங்களே முடிவு எடுத்து, நீங்களே வாங்கிக்கொள்ளலாம் என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள்.

#### மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி

இதெல்லாம் நடக்க வேண்டும் என்றால் மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும். அமையப் போவது உறுதி. அதற்கு அதிக வலுசேர்க்கும் விதமாக இந்தப் போடி தொகுதியில் அண்ணன் ஓ.பி.எஸ் அவர்களை அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்து நீங்கள் அனுப்ப வேண்டும். உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது நிச்சயமாக வெற்றி பெற வைத்து விடுவீர்கள் என்று எனக்குத் தெரிகிறது.

கூட்டத்தினர் - போட்டோ, போட்டோ

புகைப்படமா? என்ன புகைப்படம்? என்னிடம் அந்தப் புகைப்படம் இல்லை. திட்டுகிறார். சரி, புகைப்படம்தானே? அது பெரிய உலகப் புகழ்பெற்ற புகைப்படம். அதற்கு இப்போது ஒரு நேயர் விருப்பம் மாதிரி, எல்லா இடத்திலும் கேட்கிறீர்கள். இப்போதுதான் தெரிகிறது ஏன் அவ்வளவு கோபப்படுகிறார் என்று. சரி, நான் காண்பிக்கிறேன்.

நான் என்ன சொன்னேன்? நான் ஒரே ஒரு வார்த்தைதான் சொன்னேன். நாம் முரட்டுபக்தர்கள் பார்த்திருப்போம், முரட்டு தொண்டர்கள் கேள்விப்பட்டிருப்போம். ஆனால், ஒரு நம்பர் ஒன் முரட்டு அடிமையைப் பார்த்திருக்கிறீர்களா என்று நான் கேட்டேன்.

ஏன் அப்படி கேட்டேன்? அதற்கு ஒரு உதாரணம், இப்போது சொல்லட்டுமா? இன்று ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தைக் கூட்டி, நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை, 'டி-லிமிட்டேஷன்' என்கிற மசோதாவை நிறைவேற்ற இருக்கிறார்கள். நாம் எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறோம். கடந்த வருடமே இதற்காக முதலில் குரல் கொடுத்தது, நம் தலைவர்தான். தென் மாநிலங்களிலிருந்து அனைத்து முதலமைச்சர்களையும் வரவழைத்து, டி-லிமிட்டேஷன் கொண்டு வரப் போகிறார்கள், இதை எதிர்க்க வேண்டும் என்று சொன்ன முதல் தலைவர் நம் தலைவர். இன்று கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த டி-லிமிட்டேஷன் என்றால் என்ன? அதாவது மக்கள் தொகையைக் கணக்கெடுத்து, ஒவ்வொரு மாநிலத்திலும் எம்.பி.க்கள் ஒதுக்கிறார்கள் அல்லவா, அதை மறுவரையறை செய்வதுதான், நிர்ணயிப்பதுதான் இந்த டி-லிமிட்டேஷன். இப்போது நம் இந்தியாவில் மொத்தம் 543 நாடாளுமன்ற உறுப்பினர்கள். இந்த தொகுதி மறுவரையறை மூலமாக அதை 815-ஆக, மக்கள் தொகையைப் பார்த்து உயர்த்தப் போகிறார்கள்.

#### எந்தத் திட்டமும் வழங்கியதில்லை

நம் தமிழ்நாட்டில் இப்போது 39 எம்பிக்கள் இருக்கிறார்கள். நமக்கு நியாயப்படி 59 எம்பிக்கள் வர வேண்டும், கொடுக்க வேண்டும். ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு என்ன செய்கிறார்கள்? 59 கொடுக்க முடியாது, 47 எம்.பிக்கள்தான் தமிழ்நாட்டுக்குக் கொடுக்க முடியும் என்று தமிழ்நாட்டை மீண்டும் பழிவாங்குகிறார்கள். அதாவது தமிழ்நாட்டுக்கு 12 எம்.பி. இடங்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு இன்று குறைக்கிறது. அப்படிச் செய்யும்போது நாடாளுமன்றத்தில் நம் முக்கியத்துவம் குறையும். ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏற்கனவே நமக்கான நிதியைக் கொடுப்பதில்லை. நமக்கான திட்டங்களையும் நிறுத்தி வைக்கிறார்கள். எந்தத் திட்டத்தையும் தமிழ்நாட்டுக்கு வழங்கியதில்லை. இப்போது எம்.பி.க்களுடைய எண்ணிக்கையையும் குறைக்கப் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள், மிகுந்த எச்சரிகையுடன் வாக்களிக்க வேண்டிய தேர்தல் இது. அதாவது முறையாக மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய தமிழ்நாட்டுக்கு இன்று ஒரு தண்டனையைக் கொடுக்கிறார்கள். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாத வட மாநிலங்களுக்கு, அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிய பா.ஜ.க அரசு கொடுக்கிறது. அதனால்தான் இதை எதிர்த்து நாம் போராடிக் கொண்டிருக்கிறோம், கருப்புக்கொடி காட்டிக் கொண்டிருக்கிறோம்.

#### தமிழ்நாட்டுக்குத் துரோகம்

இன்று காலை நம் தலைவர் அவர்களும் நானும் தொகுதி மறுவரையறையின் சட்டநகலை தமிழ்நாடு முழுவதும் எரித்திருக்கிறோம். நம் எதிர்ப்பைக் காட்டியிருக்கிறோம். டி-லிமிட்டேஷன் கொண்டு வருவது நம் மாநில உரிமையைப் பறிக்கின்ற வேலை. நாம் இவ்வளவு எதிர்ப்பு காட்டியிருக்கிறோம், நாம் எதிர்த்து அறிக்கை வெளியிட்டிருக்கிறோம். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இன்று என்ன சொல்கிறார்? ``தமிழ்நாட்டுக்கு எந்தப் பாதிப்பும் வராது''. யார்? எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

ஏனென்றால் பாதிப்பு வரும் என்று சொன்னால், அவருக்குப் பாதிப்பு வந்துவிடும். பி.ஜே.பி. தண்டிக்கும். அதனால்தான் மீண்டும் தமிழ்நாட்டுக்குத் துரோகத்தைப் செய்கிறார். அதனால்தான் நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன், மோடியின் நம்பர் ஒன் முரட்டு அடிமை எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

இதைச் சொன்னதற்குத்தான் கோபித்துக் கொண்டார். ``எந்த அனுபவத்தை வைத்து உதயநிதி பேசுகிறார்'' என்று கேட்டார். நான் சொன்னேன் ``எனக்கு எந்த அனுபவமும் கிடையாது, முக்கியமாக இந்த மாதிரி அனுபவம் எல்லாம் எனக்கு கிடையாது''என்று.

(போட்டோவை காட்டுகின்றார்)

யார் காலையும் பிடித்து முதலமைச்சரான அனுபவம் எனக்குக் கிடையாது. சங்கிக் கூட்டத்திடம் பயப்படும் அனுபவம் எனக்குக் கிடையாது. இதைத்தான் சொன்னேன். இதில் என்ன தவறு இருக்கிறதா? இங்கே கீழே படுத்திருக்கிறார் அல்லவா தெரிகிறதா? இந்தப் புகைப்படத்தைக் காட்டியதற்குத்தான் இப்போது கோபித்துக்கொண்டார். இப்போது என்ன சொல்கிறார்? ``ஆமாம் என்னை முதலமைச்சர் ஆக்கினார்கள், அதனால் மரியாதை நிமித்தமாகச் சென்று காலில் விழுந்தேன்'' என்று கூறிவிட்டார்.

நான் காலில் விழுந்ததைத் தவறு சொல்லவே இல்லை. காலில் விழுந்து அந்த அம்மாவைப் பார்த்து 'நீயா என்னை முதலமைச்சர் ஆக்கினாய்?' என்று சொல்லி, அந்த அம்மா காலையும் வாரிவிட்டார். அதைதான் தவறு என்று சொல்கிறேன்.

இந்தப் பிரச்சினையை நாம் ஆரம்பித்து வைத்துவிட்டோம். இப்போது சசிகலா அம்மா வந்துவிட்டார்கள். இப்போது அவர்கள் கேட்கிறார்கள், 'அந்த தம்பி உதயநிதி சொல்கிறது சரிதானே, நீ பதில் சொல்' என்று அவர்கள் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். இப்போது நாம் இதிலிருந்து வெளியே வந்துவிடுவோம். நாம் வெறும் வேடிக்கை மட்டும் பார்ப்போம்.. நீங்கள் கேட்டதற்காகவே நான் காட்டுகிறேன், ஆனால் என்னைத் திட்டுகிறார்.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், நம் தலைவரை மீண்டும் மீண்டும் சொல்வது மாதிரி, இந்தச் சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணியா? தமிழ்நாடு அணியா? டெல்லி அணி vs தமிழ்நாடு அணி. டெல்லி அணியை நாம் வீழ்த்தியே ஆக வேண்டும். தமிழ்நாடு அணி நாம் வென்று காட்ட வேண்டும். அது மிகப்பெரிய வெற்றியாக இருக்க வேண்டும்.

#### திட்டங்களைச் சொல்லுங்கள்

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இன்று தேதி 16, தேர்தல் நாள் 23, இன்னும் ஒரு வாரம் இருக்கிறது. உதயநிதி வந்தார், வாக்கு கேட்டார், திட்டங்களைப் பற்றிச் சொன்னார், வாக்குறுதி கொடுத்திருக்கிறார், கலைந்து சென்றுவிட்டோம் என்று கலைந்து சென்றுவிடக்கூடாது.

நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் அடுத்த ஒரு வாரம், அடுத்த ஆறு நாட்கள் நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீடாகச் சென்று, ஒவ்வொரு தெருவாகச் சென்று, ஒவ்வொரு வாக்காளரைச் சந்தித்து நம் திட்டங்களைச் சொல்லுங்கள். என்னென்ன செய்திருக்கிறோம், இந்த ஐந்து வருடம் என்ன செய்தோம்? அடுத்த ஆட்சிக்கு வந்தால் என்னென்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறோம், என்னென்ன செய்வோம்? என்று சொல்லுங்கள்.

எல்லாவற்றையும் விட முக்கியம், மீண்டும் சங்கிக் கூட்டத்தையும் அடிமைக் கூட்டத்தையும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விட்டுவிடக்கூடாது. அப்படி விட்டோம் என்றால் தமிழ்நாட்டை மீண்டும் பின்னோக்கி இழுத்துச் சென்றுவிடுவார்கள் என்கிற பிரச்சாரத்தை அடுத்த ஒரு வாரம் நீங்கள் ஒவ்வொருவரையும் சந்தித்துச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தீர்கள் என்றால், நீங்கள் சொன்னது மாதிரி குறைந்தது ஒரு லட்சம் வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் ஓ.பி.எஸ் அவர்கள் மிகப்பெரிய வெற்றியைப் பெறுவார்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாகப் பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். இந்தப் போடி தொகுதியில் அண்ணன் பன்னீர்செல்வம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தாருங்கள். உங்களின் சட்டமன்ற உறுப்பினராக உங்களுக்குத் என்னென்ன தேவையோ அனைத்தையும் நம் முதலமைச்சரிடம் சொல்லி இந்தத் தொகுதிக்கு நிச்சயம் செய்வார் என்ற வாக்குறுதியைக் கொடுக்கிறேன்.

உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், மாவட்டக் கழகச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஓ.பி.ரவீந்திரநாத், தொகுதி மாவட்ட நிர்வாகிகள் செந்தில்முருகன், திருக்கண்ணன், சுரேஷ், சங்கர், தேவேந்திரன், ராஜாரமேஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் போடி லட்சுமணன், தொகுதிப் பார்வையாளர் குழந்தைவேலு, ஒன்றிய-நகர-பேரூர் கழகச் செயலாளர்கள் செல்வராஜ், ரத்தினசபாபதி, ஐயப்பன், சக்கரவர்த்தி, முருகேசன், புருஷோத்தமன், ராஜேந்திரன், செல்வம், திலீப்குமார், ஓ.ஏ.முருகன், கவியரசு, செல்வராஜ், பேரூர் மன்றத் தலைவர் மிதுன் சக்கரவர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆஜீப்கான், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெயக்குமார், விஜயக்குமார், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்துச் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.